## சென்னை-32, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை: திரு.த.ஆபிரகாம், இ.ஆ.ப**

செ.மு.ஆ.எண்.விகுப3/16134/2021 நாள். 01.03.2025

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணிநியமனம் புதுக்கோட்டை விற்பனைக்குழு-திரு.ப.மு.மணிகண்டராஜா, இளநிலை உதவியாளர்(பிணையம்) பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடல் தொடர்பாக

பார்வை : 1. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.விகுப3/16134/2021 நாள்.06.05.2023

2. அரசாணை(நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யு1) துறை, நாள்.08.03.2023

3. செயலாளர், புதுக்கோட்டை விற்பனைக்குழு, புதுக்கோட்டை அவர்களின் கடித எண்.4574/அ/2022, நாள்.08.10.2024

*****

ஆணை:

பார்வை 1-இல் கண்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, ஈரோடு விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.வே.முருகேசன், 24.11.2020 அன்று இயற்கை எய்தியதை தொடர்ந்து அன்னாரின் வாரிசுதாரர் திரு.ப.மு.மணிகண்டராஜா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பி) அவர்களுக்கு புதுக்கோட்டை விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் புதுக்கோட்டை விற்பனைக்குழுவில் 15.05.2023 மு.ப பணியில் இணைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, பார்வை 2-இல் கண்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியருக்கு எந்தவித குறைபாடுகள் இல்லாதபட்சத்தில் துறைத் தலைவர் அளவிலே பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பார்வை 3-இல் கண்ட தங்கள் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற கருத்துரு மற்றும் அசல் சான்றிதழ்கள் உண்மைதன்மையின் அடிப்படையிலும் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ள (விதி எண்.16)-ன்படி, புதுக்கோட்டை விற்பனைக்குழுவில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள

Scanned with CamScanner

திரு.ப.மு.மணிகண்டராஜா, என்பவருக்கு அவரது பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு திரு.ப.மு.மணிகண்டராஜா அவர்களுக்கு பணியில் சேர்ந்த நாளான 15.05.2023 மு.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி திரு.ப.மு.மணிகண்டராஜா அவர்கள் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி, தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

1. வேளாண் விற்பனை துறைத் தேர்வு
2. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. பவானிசாகர் அடிப்படை பயிற்சி

மேலும், இத்துடன் இணைப்பில் காணும் அசல் ஆவணங்கள் மற்றும் பணிப்பதிவேடு இணைத்து அனுப்பப்படுகிறது. அதனைப் பெற்று கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு - அசல் ஆவணங்கள்

ஒம்/- த.ஆபிரகாம்
வேளாண்மை விற்பனை மற்றும்
வேளாண் வணிக ஆணையர்

பெறுநர்

செயலாளர்,
புதுக்கோட்டை விற்பனைக்குழு,
புதுக்கோட்டை

நகல் மற்றும் மூலம்= செயலாளர்,புதுக்கோட்டை விற்பனைக்குழு, புதுக்கோட்டை.

நகல்– திரு.ப.மு.மணிகண்டராஜா, இளநிலை உதவியாளர் (பிணையம்), புதுக்கோட்டை. விற்பனைக்குழு, புதுக்கோட்டை

நகல்–ஆட்சி அலுவலர் (மேசைக்கு)

நகல்–நேர்முக உதவியாளர், இவ்வலுவலகம்

நகல்=இருப்புக்கோப்பு (விகுப3 பிரிவு)

//உத்தரவின்படி//

ஆட்சி அலுவலர்

04/03/25

Scanned with CamScanner